# 57. திருவுயர்ந்தவாறெழுத்தான்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருததம்

திருவுயர்ந்த வாறெழுத்தான் மேலும் வேறோர்
தெய்வமுள தெனுமார்க்கி களையு நாளும்
பொருவிகந்த குருபரத்தை நீத்து மாந்தர்ப்
புகழதமப் புலவரையு முறைமை மாறிப்

**பரவுமடக் குருக்களையும் பசுபா சங்கள்**
**பகர்ந்துதெய்வ மிலையென்பார் களையு நான்றான்**
**இருமையிலு மதித்திடே னவனை வேட்போ**
**ரெவரெனினுங் கரங்கூப்பி யிறைஞ்சு வேனே.**

திருஉயர்ந்த ஆறு எழுத்தான் மேலும் வேறுஓர்
தெய்வம் உளது எனும் மார்க்கிகளையும் நாளும்
பொருவு இகந்த குருபரத்தை நீத்து மாந்தர்ப்
புகழ் அதமப் புலவரையும் முறைமை மாறிப்
பரவும் மடக்குருக்களையும் பசுபாசங்கள்
பகர்ந்து தெய்வம் இலை என்பார்களையும் நான்தான்
இருமையிலும் மதித்திடேன் அவனை வேட்போர்
எவர் எனினும் கரம்கூப்பி இறைஞ்சுவேனே.

அழகு மிகுந்த ஆறு எழுத்தானுக்கும் மேலாக வேறு ஓர் தெய்வம் உள்ளது எனக்கூறும் மார்க்கத்தார்களையும், நாள்தோறும் ஒப்பில்லாத குருபரனை நீக்கி மனிதர்களைப் புகழ்ந்து பாடும் அதமப் புலவர்களையும், துதிக்கும் முறைமையை மாற்றித் துதிக்கும் மடமை உடைய குருக்களையும், பசுபாசங்களைக் கூறித் தெய்வம் இல்லை என்பவர்களையும், நான் இம்மையிலும் மறுமையிலும் மதிக்கமாட்டேன். அந்த ஆறெழுத்தானை விரும்புவோர் எவராக இருந்தாலும் அவரை என் இரு கைகளைக் கூப்பி வணங்குவேன். 1

ஆறெழுத்தானுக்கு மேலாகத் தெய்வங்கூறு மார்க்கத்தாரையும், மனிதரைப் புகழ்ந்து பாடும் அதமப் புலவரையும், மாறுபடக்கூறு குருக்களையும், பசுபாசங்களை யொப்புக்கொண்டு பதியெனுங் கடவுளையில்லையென்பாரையும் "யான்மதித்திடேன்" என அடிகள் கூறினமையின் அவர் மார்க்க நிலை இனிதறியக் கிடக்கின்றதே.

**தந்நலத்துக் கெனவணையுந் தந்தை தாயுந்**
**தம்பெருமை குயில்படிற்றுக் குருக்கண் மாரும்**
**பொன்வரவுக் கெனவடுத்த வுறவு மீண்டுப்**
**பொருத்தமுள்ள புரிவுடைய ரல்லர் நீங்கா**
**அன்பில்விரிந் தருள்பவனைச் சுவர்க்க ரேத்து**
**மனைத்தினுக்கு மாதிதந்தை தாயாய் நின்றோ**
**ரின்சொலரு ளறுமுகனைப் பரசு வாரை**
**யிறைசனகன் றாயுறவென் றிறைஞ்சு வேனே.**

தன்நலத்துக்கு என அணையும் தந்தை தாயும்
தம் பெருமை குயில்படிற்றுக் குருக்கள் மாரும்
பொன் வரவுக்கு என அடுத்த உறவும் ஈண்டுப்
பொருத்தம் உள்ள புரிவு உடையர் அல்லர் நீங்கா
அன்பில் விரிந்து அருள்பவனைச் சுவர்க்கர் ஏத்தும்
அனைத்தினுக்கும் ஆதி தந்தை தாயாய் நின்று ஓர்
இன்சொல் அறுமுகனைப் பரசுவாரை
இறை சனகன் தாய் உறவு என்று இறைஞ்சுவேனே.

தம்முடைய நன்மையின் பொருட்டாக ஆதரிக்கும் தந்தையும் தாயும், தற்பெருமை பேசுகின்ற வஞ்சகக் குருக்கள்மார்களும், பொன் கிடைக்கும் என ஆசைகொண்டு உறவு கொள்ளும் உறவினரும், இங்குப் பொருத்தம் உள்ள அன்புடையர் அல்லர். என்றும் நீங்காத அன்பு மலர்ந்து அருள்பவனைத் தேவர் துதிக்கும் எல்லாவற்றினுக்கும் முதலாய்த் தந்தை தாயாய் இருந்து ஒப்பற்ற இனிய மொழி கூறும் அறுமுகனைத் துதிப்போரைக் கடவுள், தந்தை, தாய், உறவினர் என்று நான் வணங்குவேனே. 2

**மாறாத விளமையனைக் குறமான் முன்னே**
**வளர்வேங்கை யானவனை வடிவே லானை**
**வீறேறு சிவகணங்கள் சூழப் போந்து**
**விதிர்ப்புவிளைத் தடல்வாகை சூடி னானை**
**நீறேறு மேனிமிளிர் நுதற்க ணானை**
**நீபநறு மிருகமதங் கமழ்மெய் யானை**
**ஏறேறு மிறைகுருவை யேத்து வார்க**
**ளெவரெனினுங் கரங்கூப்பி யிறைஞ்சு வேனே.**

மாறாத இளமையனைக் குறமான் முன்னே
வளர் வேங்கை ஆனவனை வடிவேலானை
வீறு ஏறு சிவகணங்கள் சூழப் போந்து
விதிர்ப்பு விளைத்து அடல் வாகை சூடினானை
நீறு ஏறு மேனிமிளிர் நுதல்கணானை
நீபம் நறும் மிருகமதம் கமழ் மெய்யானை
ஏறு ஏறும் இறை குருவை ஏத்துவார்கள்
எவர் எனினும் கரம் கூப்பி இறைஞ்சுவேனே.

3. **விதிர்ப்பு** = நடுக்கம்.

என்றும் மாறுபடாத இளமை உடையவனைக் குறமகளான வள்ளியம்மை முன்னே வளர்ந்த வேங்கை மரமாக நின்றவனை, வடிவேலுடையவனை, பெருமை மிகு சிவகணங்கள் தன்னைச் சூழ்ந்து வரச் சென்று நடுக்கம் உண்டாக்கி வலிய வெற்றியைச் சூடினவனை, திருநீறு பூசப்பெற்ற திருமேனி ஒளிவீசும் நெற்றிக் கண்கள் உடையவனை, கடம்பமலர் மாலை, நல்ல கஸ்தூரி வாசனை மணக்கும் திருமேனியானை, இடபம் ஏறும் கடவுளான சிவபெருமானின் குருவைத் துதிப்பவர்கள் எவராக இருந்தாலும் அவரைக் கைகூப்பி வணங்குவேனே. 3

**ஐயனெனும் பரமசிவ னுவகை பூத்தன்**
**றளித்தபடை யரசாகு நெடுவே றாங்கு**
**கையரசைக் கருள்கீழும் பெரியோன் றன்னைக்**
**கயிலைநடை யுடையானைக் கருணை யானை**
**நைவுறுதல் கண்டெனது கண்ணீர் மாற்று**
**நயனமொரு முந்நான்கு முடைய தேவை**
**எய்தரிய வீடளிக்குங் குகனை வேட்போ**
**ரெவரெனினுங் கரங்கூப்பி யிறைஞ்சு வேனே.**

ஐயன் எனும் பரமசிவன் உவகை பூத்து அன்று
அளித்தபடை அரசுஆகும் நெடுவேல் தாங்கு
கை அரசைக் கருள் கீழும் பெரியோன் தன்னைக்
கயிலை நடை உடையானைக் கருணையானை
நைவுஉறுதல் கண்டு எனது கண்ணீர் மாற்று
நயனம் ஒரு முந்நான்கும் உடைய தேவை
எய்துஅரிய வீடு அளிக்கும் குகனை வேட்போர்
எவர் எனினும் கரம்கூப்பி இறைஞ்சுவேனே.

தலைவன் என்னும் பரமசிவன் மகிழ்ச்சி கொண்டு, அன்று அளித்தருளிய படைக்கலத்து அரசு ஆகும் பெரிய வேலைத் தாங்கும் திருக்கையுடைய அரசனை, இருள்மலத்தைப் பிளக்கும் பெரியோனைத் திருக்கயிலை மலையில் எழுந்தருளியுள்ளவனை, கருணை உடையவனை, மெலிவுறுதல் கண்டு எனது கண்ணீரைத் துடைக்கும் பன்னிரு கண்கள் உடைய கடவுளை, அடைதற்கு அரிய வீடுபேற்றை அளித்தருளும் குகப்பெருமானை, விரும்புவோர் எவராக இருந்தாலும் அவரைக் கைகூப்பி வணங்குவேனே! 4

**சாமிமலை தனில்வதிந்த பன்னி ரண்டு**
**சகச்சிரவே தியர்களையுஞ் செந்தூர் மேய**
**நேமவிரண் டாயிரமெய் யரையு மாளோர்**
**நித்தியனைக் கபிலர்முதல் யோகத் தார்க்குச்**
**சேமமுடைத் திரிமூர்த்தி களையுந் தன்பாற்**
**றெரியநனி காட்டியவோர் சேயைப் புற்கால்**
**மாமுனிவன் பணிகுகனைப் பணிவோ ரெல்லா**
**மகியின்மிசை யான்வணங்கு மாண்பு ளாரே.**

*சாமி மலை வதிந்த பன்னிரண்டு*
*சகச்சிர வேதியர்களையும் செந்தூர்மேய*
*நேம இரண்டு ஆயிரம் மெய்யரையும் ஆள்ஓர்*
*நித்தியனைக் கபிலர் முதல் யோகத்தார்க்குச்*
*சேமம் உடைத் திரிமூர்த்தி களையும் தன்பால்*
*தெரிய நனி காட்டிய ஓர் சேயைப் புல்கால்*
*மா முனிவன் பணி குகனைப் பணிவோர் எல்லாம்*
*மகியின் மிசை யான் வணங்கும் மாண்புஉளாரே.*

சுவாமிமலையில் வாழ்ந்த பன்னிரண்டாயிரம் அந்தணர்களையும், திருச்செந்தூரில் நியமம் உடைய இரண்டாயிரம் அந்தணர்களையும், என்றும் ஆளும் ஓர் அழியாதவனைக் கபிலர் முதல் யோகத்தார்க்குக் காவல் உடைய அயன், அரி, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளையும் தன்னிடம் தெரியும்படி நன்கு காட்டின ஓர் சேயைப் புலிக்கால் மாமுனிவன் வணங்கும் குகப் பெருமானை, வணங்குவோர் எல்லாம் இவ்வுலகின்கண் நான் வணங்கும் மாட்சிமை உடையவராவர். 5

**சதுர்முகர்சக் கிரபாணி யனந்தர் நந்தி**
**தத்தரெழின் மாலியெனு மாறு பேர்க்கும்**
**முதமுடைய பிரமேந்த்ர னெனுஞா னிக்கு**
**மூதுலகா ணித்தியநா தனுக்கு மேசில்**
**இதமுடைய சொன்னகுத்த னெனுநாய கற்கு**
**மேதமிலா வேளாள வசுமந் தற்கும்**
**கதியருளிச் செய்தகுகற் றொழுவா ரெல்லாங்**
**காசினியி னான்வணங்குங் கடவு ளாரே.**

6. **பிரமேந்த்ரன்** = வடநூன்முடிபு

சதுர் முகர் சக்கிரபாணி அனந்தர் நந்தி
தத்தர் எழில் மாலி எனும் ஆறு பேர்க்கும்
முதம் உடைய பிரமேந்த்ரன் எனும் ஞானிக்கும்
மூது உலகுஆள் நித்தியநாதனுக்கும் ஏசுஇல்
இதம் உடைய சொன்ன குத்தன் எனும்நாய் கற்கும்
ஏதம்இலா வேளாள வசுமந்தற்கும்
கதி அருளிச் செய்த குகன் தொழுவார் எல்லாம்
காசினியில் நான் வணங்கும் கடவுளாரே.

பராசர முனிவருடைய புதல்வர்களான சதுர்முகர், சக்கிரபாணி, அனந்தர், நந்தி, தத்தர், அழகிய மாலி என்னும் ஆறு முனிவர்களுக்கும், உவகை உடைய பிரமேந்திரன் எனும் ஞானிக்கும், பழைமையான உலகத்தை ஆளும் அரசன் ஆன நித்தியநாதனுக்கும், குற்றமில்லாத இனிமையுடைய சொன்னகுத்தன் என்னும் இல்லத் தலைவனுக்கும், குற்றமில்லாத வேளாள குலத்தவனான வசுமந்தனுக்கும், நல்ல கதியை அருளிய குகப்பெருமானை வணங்குவார் எல்லாம் இவ்வுலகில் நான் வணங்கும் கடவுளர் ஆவர். 6

**பழநிமலைப் பாழிசெய்த சேரர் கோற்கும்**
**பழுதறுசித் திரசேன வரைய னுக்கும்**
**கிழமையுடைக் கோசிகனாம் பூசு ரற்குங்**
**கிருபைகெழு குகனென்னும் வேடர் கோற்கும்**
**எழின்மல்கு சுகப்பிரம முனிக்கு மேனா**
**ளிணையில்கதி யளித்தபரப் பிரம சேயின்**
**கழல்களையுட் கருதிடுவா ரெவரா னாலுங்**
**காசினியி லவரெனக்குக் கடவு ளாரே.**

பழநிமலைப் பாழி செய்த சேரர் கோற்கும்
பழுது அறு சித்திரசேன அரையனுக்கும்
கிழமை உடைக் கோசிகன் ஆம் பூசுரற்கும்
கிருபை கெழு குகன் என்னும் வேடர் கோற்கும்
எழில் மல்கு சுகப்பிரம முனிக்கும் மேல்நாள்
இணை இல் கதி அளித்த பரப்பிரம சேயின்
கழல்களை உள் கருதிடுவார் எவர் ஆனாலும்
காசினியில் அவர் எனக்குக் கடவுளாரே.

திருப்பழநி மலையில் திருக்கோயிலைக் கட்டின சேர அரசனுக்கும், குற்றமற்ற சித்திரசேனன் என்னும் அரசனுக்கும், உரிமை உடைய கோசிகன் என்னும் அந்தணனுக்கும், கருணை பொருந்திய குகன் என்னும் வேடர்குல அரசனுக்கும், அழகு மிகுந்த சுகப்பிரம முனிவருக்கும், முன்னாளில் ஒப்பில்லாத கதியை அளித்தருளிய பரப்பிரமம் ஆன சேயின் திருவடிகளை உள்ளத்தில் நினைத்திடுவார் எவர் ஆனாலும், இவ்வுலகில் அவரே எனக்குக் கடவுள் ஆவார். 7

**வாசுகியி னுடல்வருத்தந் தீர்த்த தேவை**
**மாபாவ மைந்துஞ்செய் யொருவற் குற்ற**
**மாசுதபுத் தனுக்கிரகஞ் செய்செவ் வேளை**
**மாதொருத்திக் கவள்கணவ னறுத்த கையை**
**மோசமின்றி வளரவருள் புரிந்த சேயை**
**முரட்களிறு கொன்றொருபுத் திரனைக் காத்த**
**தேசயிலன் றனைவிழைவா ரெவரா னாலுந்**
**திருமலிந்த வவரெனக்குக் கடவு ளாரே.**

வாசுகியின் உடல் வருத்தம் தீர்த்த தேவை
மாபாவம் ஐந்தும் செய் ஒருவற்கு உற்ற
மாசு தபுத்து அனுக்கிரகம் செய் செவ்வேளை
மாது ஒருத்திக்கு அவள் கணவன் அறுத்த கையை
மோசம் இன்றி வளர அருள்புரிந்த சேயை
முரண் களிறு கொன்று ஒரு புத்திரனைக் காத்த
தேசு அயிலன் தனை விழைவார் எவர் ஆனாலும்
திருமலிந்த அவர் எனக்குக் கடவுளாரே.

வாசுகி என்னும் பாம்பின் உடல் வருத்தத்தை நீக்கிய கடவுளை, ஐம்பெரும் குற்றங்கள் புரிந்த ஒருவனுக்குற்ற பாவங்களை ஒழித்து அனுக்கிரகம் செய்தருளிய செவ்வேட் பரமனை, பெண் ஒருத்தியின் கணவன் அவள் கையை அறுத்த போது ஆபத்து ஏதும் இல்லாமல் அக்கையை வளர அருள்புரிந்த சேயை, மதம் கொண்ட வலிய காட்டு யானையைக் கொன்று புத்திரனைக் காத்தருளிய ஒளியுடைய வேலனை, விரும்புவார் எவர் ஆனாலும், தெய்வத்தன்மை மிகுந்த அவர் எமக்குக் கடவுள் ஆவர். 8

**பொற்கனக சுந்தரியென் பாளுக் குற்ற**
**புரவிமுக மாற்றியெழின் முகந்தந் தானைக்**
**கற்பனவெல் லாங்கற்றுப் பொய்யென் றோதிக்**
**கர்த்தபமாப் பிறந்திறந்த பார்ப்பா னுக்கும்**
**நற்கமலத் தயனுலகங் கொடுத்த கோனை**
**நலனின்றிப் பாவத்தின் மூத்தி றந்த**
**அற்பமிலேச் சற்குமடி யளித்தோ னைப்பே**
**ணடியவர்க ளாரெனினு மவர்மிக் காரே.**

பொன் கனக சுந்தரி என்பாளுக்கு உற்ற
புரவி முகம் மாற்றி எழில் முகம் தந்தானைக்
கற்பன எல்லாம் கற்றுப் பொய் என்று ஓதிக்
கர்த்தபம்ஆப் பிறந்து இறந்த பார்ப்பானுக்கும்
நல்கமலத்து அயன் உலகம் கொடுத்த கோனை
நலன் இன்றிப் பாவத்தில் மூத்து இறந்த
அற்ப மிலேச்சற்கும் அடி அளித்தோனைப் பேண்
அடியவர்கள் ஆர் எனினும் அவர் மிக்காரே.

அழகிய கனகசுந்தரி என்னும் இளவரசிக்கு உண்டான குதிரை முகத்தை மாற்றி அழகிய மனித முகத்தைத் தந்தருளியவனை, கற்க வேண்டிய சாத்திர நூல்களை எல்லாம் கற்று அவை எல்லாம் பொய் என்று கூறிக் கழுதையாகப் பிறந்து இறந்த அந்தணனுக்கும், நல்ல தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமதேவனுடைய உலகத்திற் சென்று வாழும் கதியைக் கொடுத்தருளிய தலைவனை, நன்மை ஒன்றும் செய்யாமல் பாவத்தை மிகுதியாகச் செய்து இறந்த அற்பனான பவமிலேச்சனுக்கும், திருவடி அளித்தருளினவனைப் போற்றும் அடியார்கள் எவராக இருந்தாலும், அவர் பெரியோர் ஆவர். 9

**செந்தமிழைச் செவிமடுத்து மகிழுந் தேவைத்**
**திறலிடும்ப னுயிர்முருக்கி யெழுப்புந் தேவைப்**
**புந்திநிறை வுடையருண கிரிசூழ் தேவைப்**
**புகரிகந்த கரவருடங் கடக மாதம்**
**வந்தவொரு புகரிரவிற் பழநிக் கோவில்**
**வரவிஞ்ஞான் றருளவில்லை யருள்வே மந்நாள்**
**பந்தமற வருதியெனப் பணித்துப் போந்த**
**பண்ணவனைப் படர்பவரெம் பரமர் தாமே.**

செந்தமிழைச் செவிமடுத்து மகிழும் தேவைத்
திறல் இடும்பன் உயிர் முருக்கி எழுப்பும் தேவைப்
புந்தி நிறைவு உடை அருணகிரி சூழ் தேவைப்
புகர் இகந்த கர வருடம் கடகமாதம்
வந்தஒரு புகர் இரவில் பழநிக் கோவில்
வர இஞ்ஞான்று அருளவில்லை அருள்வேம் அந்நாள்
பந்தம் அற வருதிஎனப் பணித்துப் போந்த
பண்ணவனைப் படர்பவர் எம் பரமர்தாமே.

செந்தமிழ்ப் பாடலைத் தம் திருச்செவிகளில் கேட்டு மகிழும் கடவுளை, வலிமை உடைய இடும்பாசுரனின் உயிரைக் கொன்று மீண்டும் உயிர் பெற்றெழச் செய்தருளிய கடவுளை, அறிவு நிறைந்த அருணகிரிநாதர் எப்போதும் நினைக்கும் கடவுளை, குற்றமற்ற கர வருடம் கடக மாதம், ஓர் அழகிய இரவில் "பழநிக் கோவிலுக்கு நீ வருவதற்கு இப்போது நாம் அருள் செய்யவில்லை; ஒரு நாள் வருவதற்கு அருள் செய்வோம்; அப்போது உன் பற்று அறுவதற்கு அங்கு வருவாயாக" என்று கட்டளையிட்டருளிச் சென்ற இறைவனை, நினைப்பவர் எம்முடைய கடவுள் ஆவர். 10